# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 224/2017/பேரூ.

ஆணை நாள்: 09/07/2018

திரு. எம். பழனிவேல், – முறையீட்டு மனுதாரர்
த/பெ. முருகேசன்,
முள்ளிபள்ளம் தெரு,
கீழ்புவனகிரி, புவனகிரி தாலுகா,
கடலூர் மாவட்டம்.

செயல் அலுவலர்,
புவனகிரி பேரூராட்சி. – எதிர் மனுதாரர்

## ஆணை

முறையீட்டு மனுதாரர் திரு. எம். பழனிவேல் என்பவரது 22.11.2017 நாளிட்ட முறையீட்டு மனு 23.11.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனு எண்.224/2017 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவில் கீழ்குறிப்பிட்டுள்ள புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

(i) புவனகிரி பேரூராட்சி 18ம் வார்டில் சுற்றுச் சூழல் துறை அனுமதி பெறாமல் ஆடு அடிக்கும் கூடம் கட்டப்பட்டுள்ளது. இது செயல்படுமேயானால் தொற்று நோய் பரவி பொது மக்கள் பாதிப்படைவர்.

(ii) 10வது வார்டில் பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட சிறிய பாலத்தில் தீ அணைப்பு வாகனங்கள் செல்ல இயலாத நிலை உள்ளதாகவும் பெரிய பாலம் கட்டித் தரவும் கோரப்பட்டது.

(iii) 6-வது வார்டில் தாமரைத் குளத்தில் டெண்டர் விடப்படாத காலத்தில் அனுமதியின்றி மீன் பிடித்து விற்பனை செய்தமை

(iv) விவசாய தொழிலாளர்களும், ஆதி திராவிட மக்களும் உபயோகப்படுத்தும் சாலையை அடைத்து கருமகாரிய கொட்டகை கட்டியது

(v) 3-வது வார்டில் சாதி பாகுபாடுடன் இரண்டு கருமகாரிய கொட்டகை கட்டியது.

(iv) 10-வது வார்டு ஆதி திராவிட மக்களுக்கு காத்திருப்போர் கூடத்தை கட்ட இடம் இல்லை எனக் கூறி ஒதுக்கப்பட்ட நிதியை திருப்பியதாக புகார்.

மேற்படி புகார்கள் குறித்து எதிர்மனுதாரரான புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கை சமர்ப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவம் 27.11.2017 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது. செயல் அலுவலரது 19.01.2018 நாளிட்ட அறிக்கை 29.01.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரரது விளக்கங்களை பதிவு செய்யவும், ஆதார ஆவணங்களை தாக்கல் செய்ய ஏதுவாகவும் 11.04.2018 அன்று ஆஜராகுமாறு தெரிவித்து மனுதாரருக்கு 05.02.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவம் அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கையும் மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவர் தரப்பிலான ஆட்சேபனை/விளக்கங்கள் ஏதுமிருப்பின் இரண்டு வாரத்திற்குள் அனுப்பி வைக்குமாறு தெரிவித்து தனியே அறிவிப்பாணையும் அனுப்பி வைக்கப்பட்டது.

மனுதாரர் தனது 21.02.2018 நாளிட்ட கடிதத்தில் ஆடு அடிக்கும் கூடம் செயல்படாததால் ரூ.20 லட்சம் நிதி வீணடிக்கப்பட்டுள்ளதாகவும், 10வது வார்டு மானம்பார்த்தான் வாய்க்காலில் இதுவரை பாலம் கட்டித்தரப்படவில்லை என்றும் தாமரைக் குளத்தில் அனுமதியின்றி மீன் பிடித்து விற்கப்பட்டதாகவும், சாதிப்பாகுபாடுடன் இரண்டு கரும காரிய கொட்டகைகள் கட்டப்பட்டதெனவும் 10வது வார்டுக்கு காத்திருப்போர் கூடம் கட்ட ஒதுக்கப்பட்ட நிதியை இடமில்லை என திருப்பி விட்டதாக கூறப்பட்ட தனது புகார்களையே மீள குறிப்பிட்டுள்ளார். மேலும், மனுதாரர் தனது 10.3.2018 நாளிட்ட பிறிதொரு கடிதத்தில் பேரூராட்சி செயல் அலுவலரிடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் கோரிப் பெறப்பட்ட சில தகவல்கள் குறித்து தெரிவித்துள்ளதுடன் 11.04.2018 அன்று முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராவதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஆனால், மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகவில்லை. இருப்பினும், கூடுதல்

வாய்ப்பாக 02.07.2018 அன்று மறு விசாரணைக்கு ஆஜராகிடுமாறு தெரிவித்து அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேலும், அவ்வாறு வரத்தவறும் நிலையில் மனுதாரர் தரப்பில் கூறிக்கொள்ள விளக்கம் ஏதுமில்லை எனக் கருதி ஆவணங்களின் அடிப்படையில் உரிய தீர்வு காணப்படுமெனவும் 28.5.2018 நாளிட்ட ஆணை மூலம் தெரிவிக்கப்பட்டது. மேற்படி விசாணைக்கு ஆஜராகுமாறு செயல் அலுவலருக்கும் தனியே அழைப்பாணை அனுப்பப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் மேற்படி மறுவிசாரணைக்கும் (2.7.2018) ஆஜராகவில்லை எந்த ஒரு விளக்கத்தினையும் சமர்ப்பிக்கவில்லை. புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் மட்டும் மேற்படி விசாரணையன்று ஆஜராகி தனது தரப்பிலான வாக்குமூலத்தினை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வாக்குமூலத்தில் 18-வது வார்டு ஆடு அடிக்கும் தொட்டி கூடம் சுற்றுச்சூழல் மற்றும் உணவு பாதுகாப்புத் துறை அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் உணவு பாதுகாப்புத் துறை அனுமதி ஆணைக்கேற்ப செயல்படுத்தப்படுமெனவும் தற்போது மேற்படி கூடத்தில் அங்கன்வாடி செயல்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கள்ளிக்காட்டு காலனியில் பாலம் அமைத்திட ரூ.85 லட்சம் திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு உரிய முன் மொழிவு அனுப்பப்பட்டுள்ளதெனவும். நிதி ஒதுக்கீடு பெற்றவுடன் பணி துவங்கப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் தாமரைக் குளத்தில் மீன் பிடி குத்தகை ஏலம் முறையாக விடப்பட்டு ஏலத் தொகை முழுமையாக வசூலிக்கப்பட்டு பேரூராட்சியின் கணக்கில் இருசால் செய்யப்பட்டுள்ளதெனத் தெரிவித்துள்ளதுடன் 02.07.2018 நாளிட்ட ஒரு விரிவான அறிக்கையினையும் தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி அறிக்கையில் வார்டு எண்.3ல் திருவள்ளுவர் நகரில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2013-14ன் கீழ் உரிய நிர்வாக அனுமதி, தொழில் நுட்ப அனுமதியுடன் ஒரு கரும காரிய கொட்டகை கட்டப்பட்டது குறித்தும், முள்ளிப்பள்ளம் காலனியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.3.50 லட்சம் 2015-16 மதிப்பீட்டில் உரிய நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதியுடன் பிறிதொரு கரும காரிய கொட்டகை கட்டப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளதுடன் மேற்படி இரு பகுதி பொது மக்களும் மேற்படி கரும காரிய கொட்டகைகள் பெரிதும் பயனுள்ளதாக அளித்துள்ள கடிதங்களின் நகல்களும் இணைத்தும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேலும், கள்ளிக்காட்டு காலனியில் காத்திருப்போர் கூடம் அமைக்கும் பணிக்கு போதிய இடவசதியின்மையால் 2015-16ம் ஆண்டு புவனகிரி

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டிருப்பினும் மேற்படி ஆணை ரத்து செய்து உத்தரவிடப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கடலூர் அவர்களது 29.11.2016 நாளிட்ட செயல்முறை ஆணையின் நகலும் இணைந்து தாக்கல் செய்யப்பட்டது.

எனவே, மேற்படி செயல் அலுவலரது வாக்குமூலம், அறிக்கைகள் மற்றும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. முறையீட்டு மனுதாரருக்கு போதிய வாய்ப்புகள் அளித்தும் தனது மனுவிற்கு ஆதாரங்கள் சமர்ப்பிக்கவில்லை, ஆஜராகவும் இல்லை இருப்பினும் அனைத்தையும் பரிசீலித்து கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகின்றது. சுற்றுக்சூழல் துறை போன்ற அவசியமான துறை அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டியது தவறு என்பதை இம்முறைமன்ற நடுவம் சுட்டிக் காட்டுகிறது. எனவே, ஆடு அடிக்கும் கூடம் அமைக்க முறையே உரிய தடையின்மை சான்று பெறாமல் பணி முடிக்கப்பட்டதால் தற்போது ஒரு ரூ.20 லட்சம் மதிப்பீட்டிலான அக்கட்டிடம் கட்டப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்த் இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, துறைரீதியான நடவடிக்கைகள் மட்டுமன்றி தேவையான ஏற்பளிப்பாணை பெறவும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 9-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//---

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. எம். பழனிவேல்,
   த/பெ. முருகேசன்,
   முள்ளிபள்ளம் தெரு,
   கீழ்புவனகிரி, புவனகிரி தாலுகா,
   கடலூர் மாவட்டம்.
2. செயல் அலுவலர்,
   புவனகிரி பேரூராட்சி,
   புவனகிரி, கடலூர் மாவட்டம் – 607001.
3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   பேரூராட்சிகளின் உதவி இயக்குநரகம்,
   கடற்கரை சாலை, கடலூர் – 607 001.